அனுப்புநர்
ஆணையர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,
பனகல் மாளிகை,
சைதாப்பேட்டை, சென்னை–15.

பெறுநர்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
அனைத்து மாவட்டங்கள்.

ந.க.எண். 10737/2024/பி3 நாள்.07.06.2025

அய்யா,

பொருள்: பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு –20% இட ஒதுக்கீட்டின் கீழ் இளநிலை உதவியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டது – மீண்டும் ஊராட்சி செயலராக பதவியிறக்கம் செய்ய கோரி விண்ணப்பித்துள்ளது – தெளிவுரை கோரியது – கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது – சார்பு.

பார்வை: அரசு கடித எண். 8500427/பஅ–7/2024–1, நாள். 21.05.2025

*****

பார்வையில் காணும் கடிதத்தின் மீது மேலான கவனம் கொணர விழைகிறேன்.

20% இடஒதுக்கீட்டின் கீழ் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு, மீள ஊராட்சி செயலாளராக பணியிடம் வழங்க கோருவது தொடர்பாக அளித்துள்ள விண்ணப்பத்தின் மீது அரசிடம் தெளிவுரை கோரப்பட்டதில் பின்வருமாறு தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

I. இளநிலை உதவியாளர்களுக்கான பணிவிதிகள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணிநிபந்தனை) சட்டம், 2016 ஆகும். இவர்கள் ரூ.19,500–71,900(நிலை 8) என்ற காலமுறை ஊதியத்தில் ஊதியம் பெற்று வருகிறார்கள்.

II. ஊராட்சி செயலர்கள் அரசுப் பணியாளர் அல்ல. இவர்களுக்கான பணிவிதிகள் தமிழ்நாடு கிராம ஊராட்சி செயலர்கள்(பணிநிபந்தனை) விதிகள், 2023 அரசாணை(நிலை) எண்.113, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ5) துறை நாள். 13.09.2023–ல் வெளியிடப்பட்டுள்ளது. இவர்களுக்கு கிராம ஊராட்சி பொது நிதியிலிருந்து ரூ.15,900–50,400(நிலை 2) என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

III. அரசாணை (நிலை) எண். 113, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள். 13.09.2023–ல் ஊராட்சி செயலர்களின் பணிநியமனம் நேரடி நியமனமாக வரையறுக்கப்பட்டுள்ளது. வேறொரு பதவியிலிருந்து திரும்ப ஊராட்சி செயலர் பதவிக்கு வருவதற்கு விதிகளில் வழிவகை ஏதும் குறிப்பிடப்படவில்லை.

IV. பதவி உயர்வு துறப்பு குறித்து தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ல் பிரிவு 57–ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

V. Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 Relinquishment of rights by members

a) **57.(1)** - Any person may, in writing, relinquish any right or privilege to which he may be entitled under this Act or the special rules if, in the opinion of the appointing authority, such relinquishment is not opposed to public interest; and nothing contained in this Act or the special rules shall be deemed to require the recognition of any right or privilege to the extent to which it has been so relinquished.

b) **(2)** - Relinquishment of a right or privilege for a temporary period shall be accepted if it is made for a period of not less than three years, subject to the condition that after the expiry of the said period, the claim of the right or privilege relinquished will be with reference to the state of affairs that exist on the date of expiry of the period of relinquishment and without restoration of original seniority. If relinquishment of right or privilege is made permanently and is accepted, Subsequent claim of the relinquished rights or privileges shall not be entertained.

VI. மேற்படி விதியில், ஒரு பணியாளரின் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாக பதவி உயர்வினை துறப்பதற்கான (Relinquishment of Right of Promotion) விண்ணப்பமானது பதவி உயர்வு வழங்கப்படுவதற்கு முன்னர் அளிக்கப்பட்டால் மட்டுமே பதவி உயர்வு துறப்பினை அனுமதிக்க இயலும். இத்தகைய நேர்வுகளில் தன்விருப்பத்தின் அடிப்படையில் பதவி உயர்வு பெற்றுக் கொண்டு, பிறகு திரும்ப பழைய பதவிக்கு செல்வது குறித்து எந்தவித வழிவகைகளும் குறிப்பிடப்படவில்லை.

VII. ஊராட்சி செயலர்கள் தன்விருப்பத்தின் அடிப்படையில் பணிமாறுதல் மூலம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெற்ற பின்பே இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மேற்படி, ஊராட்சி செயலர் நிலையிலிருந்து பணிமாறுதல் மூலம் பதவி உயர்வு பெற்ற பின்னர் மீள ஊராட்சி செயலர் பணியிடம் வழங்குமாறு கோருவதால் தற்போது வகிக்கும் இளநிலை உதவியாளர் பணியிடமும் மற்றும் ஊராட்சி செயலருக்கான பணியிடமும் பாதிப்படையும் நிலை ஏற்படுகிறது. மேலும் இது ஒரு தவறான முன்னுதாரணமாகும்.

VIII. இளநிலை உதவியாளர் பணியிடம் அலுவலகத்திற்குள்ளேயே பணிபுரியக் கூடிய பணியிடமாகும். ஆனால் ஊராட்சி செயலர் பணியிடத்தில் அலுவலகம்

→

மட்டுமில்லாமல், நேரடியாக களஆய்வு சென்று பணிபுரியக்கூடிய பணிகளும் அடங்கியுள்ளது. எனவே, தனியரால் பதவி துறப்புக்கு குறிப்பிடப்படும் உடல்நலம் சார்ந்த காரணங்கள் ஊராட்சி செயலர் பதவியில் பெரும் சிரமத்தை ஏற்படுத்தும்.

மேலும், மேற்காணும் சூழ்நிலையில், இனிவரும் காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகளில் மேற்காணும் காரணங்களை தெரிவித்து நியமன அலுவலர் நிலையிலேயே, தனியரது கோரிக்கையை ஏற்க இயலாது என அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தெரிவிக்குமாறும், மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊராட்சி செயலர் நிலையிலிருந்து இளநிலை உதவியாளராக, 20% பதவி உயர்வுக்கு பரிசீலிக்கும் நபர்களிடம், இளநிலை உதவியாளர் பதவி உயர்வினை நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக பதவி உயர்வு துறப்பு செய்துள்ளனரா (Relinquishment) என்பதை உறுதி செய்து கொண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்(பணிநிபந்தனைகள்) சட்டம், 2016ல் பிரிவு 57ல் உள்ள வழிமுறைகளின் அடிப்படையில் ஆய்வு செய்து கருத்துரு அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, 20% இடஒதுக்கீட்டின் கீழ் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு மீள ஊராட்சி செயலாளராக பணியிடம் வழங்க கோரி விண்ணப்பம் அளிக்கும் நேர்வில் பார்வையில் காணும் அரசுக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பணி நியமன அலுவலர் நிலையிலேயே உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு– பார்வையில் காணும் அரசுக் கடித நகல்

அ.ம. [signature] 10/06/20..

ஆணையருக்காக

[signature] 10/6/25

ஊரக வளர்ச்சி மற்றும்
ஊராட்சித் (இ7) துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9
தொலைபேசி - 044 -25672169
இணையதளம்- www.tnrd.gov.in

29 MAY 2025

கடித எண் 8500427/ பஅ-7/2024-1, நாள் 21.05.2025.

அனுப்புநர்
திரு. ககன்தீப் சீங் பேடி, இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

10737/24
39249 - 3

பெறுநர்
ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி ஆணையர்,
சென்னை-15.

அய்யா,

பொருள்: பணியமைப்பு – திருப்பூர் மாவட்டம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு -2020-2021ஆம் ஆண்டு 20% விழுக்காடு இட ஒதுக்கீட்டின் கீழ் இளநிலை உதவியாளர் பதவி உயர்வு – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயம் இசைவினை வழங்கியது – திரு.ஆர்.பெருமாள், என்பவர் குடும்ப சூழ்நிலை காரணமாக மீண்டும் மீள ஊராட்சி செயலாளராகப் பதவியிறக்கம் செய்யக் கோரி விண்ணப்பத்துள்ளது – தெளிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: 1. திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித ந.க.எண்.6454/2023/வி2, நாள் 06.02.2024 மற்றும் 26.03.2024.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண். 10737/ 2024/ பி3, நாள் 16.09.2024.

-----

பார்வையில் காணும் தங்களது கடிதத்தின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது தங்களது கருத்துருவினை ஆய்வு செய்ததில், திருப்பூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் 2020-2021-ஆம் ஆண்டு 20% இட ஒதுக்கீட்டின் கீழ், இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.பெருமாள், என்பவர் மீள ஊராட்சி செயலராக பணிபுரிய அளித்துள்ள கோரிக்கையினை கீழ்கண்ட காரணங்களின் அடிப்படையில் ஏற்க இயலாது என்ற தெளிவுரை வழங்கப்படுகிறது.

I. இளநிலை உதவியாளர்களுக்கான பணிவிதிகள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணிநிபந்தனை) சட்டம், 2016 ஆகும். இவர்கள் ரூ.19,500-71,900 (நிலை 8) என்ற காலமுறை ஊதியத்தில் ஊதியம் பெற்று வருகிறார்கள்.

II. ஊராட்சி செயலர்கள் அரசுப் பணியாளர் அல்ல. இவர்களுக்கான பணிவிதிகள் தமிழ்நாடு கிராம ஊராட்சி செயலர்கள்(பணிநிபந்தனை) விதிகள், 2023 அரசாணை(நிலை) எண்.113, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ5) துறை நாள். 13.09.2023-ல் வெளியிடப்பட்டுள்ளது. இவர்களுக்கு கிராம ஊராட்சி பொது நிதியிலிருந்து ரூ.15,900-50,400(நிலை.2) என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

III. அரசாணை (நிலை) எண். 113, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள். 13.09.2023-ல் ஊராட்சி செயலர்களின் பணிநியமனம் நேரடி நியமனமாக வரையறுக்கப்பட்டுள்ளது. வேறொரு பதவியிலிருந்து திரும்ப ஊராட்சி செயலாளர் பதவிக்கு வருவதற்கு விதிகளில் வழிவகை ஏதும் குறிப்பிடப்படவில்லை.

IV. பதவி உயர்வு திறப்பு குறித்து தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ல் பிரிவு 57-ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

V. Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 Relinquishment of rights by members

a. 57.(1) – Any person may, in writing, relinquish any right or privilege to which he may be entitled under this Act or the special rules if, in the opinion of the appointing authority, such relinquishment is not opposed to public interest; and nothing contained in this Act or the special rules shall be deemed to require the recognition of any right or privilege to the extent to which it has been so relinquished.

b. (2) – Relinquishment of a right or privilege for a temporary period shall be accepted if it is made for a period of not less than three years, subject to the condition that after the expiry of the said period, the claim of the right or privilege relinquished will be with reference to the state of affairs that exist on the date of expiry of the period of relinquishment and without restoration of original seniority. If relinquishment of right or privilege is made permanently and is accepted, Subsequent claim of the relinquished rights or privileges shall not be entertained.

VI. மேற்படி விதியில், ஒரு பணியாளரின் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாக பதவி உயர்வினை துறப்பதற்கான (Relinquishment of Right of Promotion) விண்ணப்பமானது பதவி உயர்வு வழங்கப்படுவதற்கு முன்னர் அளிக்கப்பட்டால் மட்டுமே பதவி உயர்வு துறப்பினை அனுமதிக்க இயலும். இத்தகைய நேர்வுகளில் தன விருப்பத்தின் அடிப்படையில் பதவி உயர்வு பெற்றுக்கொண்டு, பிறகு திரும்ப பழைய பதவிக்கு செல்வது குறித்து எந்தவித வழிவகைகளும் குறிப்பிடப்படவில்லை.

VII. ஊராட்சி செயலர்கள் தன் விருப்பத்தின் அடிப்படையில் பணிமாறுதல் மூலம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெற்ற பின்பே இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுகிறார்கள். மேற்படி, ஊராட்சி செயலர் நிலையிலிருந்து பணிமாறுதல் மூலம் பதவி உயர்வு பெற்ற பின்னர் மீள

ஊராட்சி செயலர் பணியிடம் வழங்குமாறு கோருவதால் தற்போது வகிக்கும் இளநிலை உதவியாளர் பணியிடமும் மற்றும் ஊராட்சி செயலருக்கான பணியிடமும் பாதிப்படையும் நிலை ஏற்படுகிறது. மேலும் இது ஒரு தவறான முன்னுதாரணமாகும்.

VIII. இளநிலை உதவியாளர் பணியிடம் அலுவலகத்திற்குளேயே பணிபுரியக்கூடிய பணியிடமாகும். ஆனால் ஊராட்சி செயலர் பணியிடத்தில் அலுவலகம் மட்டுமில்லாமல் நேரடியாக களஆய்வு சென்று பணிபுரியக்கூடிய பணிகளும் அடங்கியுள்ளது, எனவே, தனியாரால் பதவி துறப்புக்கு குறிப்பிடப்படும் உடல்நலம் சார்ந்த காரணங்கள் ஊராட்சி செயலர் பதவியில் பெரும் சிரமத்தை ஏற்படுத்தும்.

2. மேற்கண்ட சூழ்நிலையில், இனிவருங்காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகளில் மேற்கண்ட காரணங்களை தெரிவித்து நியமன அலுவலர் அளவிலேயே, தனியரது கோரிக்கைகளை ஏற்க இயலாது என அனைத்து மாவட்ட அலுவலர்களுக்கும் தெரிவிக்குமாறும், மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊராட்சி செயலர் நிலையிலிருந்து இளநிலை உதவியாளராக, 20% பதவி உயர்வுக்கு பரிசீலிக்கு நபர்களிடம், இளநிலை உதவியாளர் பதவியினை நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக பதவி உயர்வு (Relinquishment) துறப்பு செய்துள்ளாரா என்பதை உறுதி செய்து கொண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ல் பிரிவு 57ல் உள்ள வழிமுறைகளின் அடிப்படையில் ஆய்வு செய்து அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

21/5/25

அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்காக

21/5/25

**நகல்**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருப்பூர் மாவட்டம்.